10வது ஆண்டில்

# உலக தமிழோசை ®

ULAKA THAMILOSZAI

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

# விளம்பரம் ™

VLAMBARAM ™

☎ (416) 282-8059

(416) 282-4978

நதி 11 MARCH 01, 2001 பாலம் 05



- கள்ள நோட்டுக்கும் நல்ல நோட்டுக்கும் உள்ள வேறுபாடு (பக்.2)
- பொட்டு வைத்தல் / காது குத்துதலின் காரணம் என்ன? (பக். 05)
- சிவனொளிபாத மலையில் உள்ள சுவடு யாருடையது? (பக். 9)
- அடிபட்ட வாகனங்கள் வாங்கலாமா? (பக்.03)
- பருவ வயதை அடைந்ததும் திருமணம் செய்யலாமா? (பக். 13)
- பிள்ளைகளின் வளர்ச்சியைத் தூண்டுவதற்கு(பக்.10)
- கொம்பியூட்டரில் இசையைக் கேட்க (பக். 08)
- வீட்டின் விலை குறைய சாத்தியமா? (பக்.17)
- உதைபந்தாட்ட விடிவெள்ளிகள் வரிசையில் (பக். 6)






RE/MAX® Crossroads Realty Inc., REALTOR
Independently Owned and Operated

வீடு வாங்க, விற்க
பூரண ஆலோசனை பெற

Raja M. Mahendran, P. Eng.
Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME

MEMBER OF RE/MAX PLATINUM CLUB

(416) 491-4002

Pager: (416) 589-4270



இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்
சபோனாவிற்கு!

SABONA & Gift

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151

2602 B Eglinton Ave. E., Scarborough


## உலக நாடுகள் வரிசையில்
### பிஜி (FIJI)



தென் பசுபிக் சமுத்திரத்தில் உள்ள இரு பெரும் தீவுகள் அதனுடன் சேர்ந்து சுமார் 330 தீவுகள் யாவும் சேர்ந்தே "பிஜி தீவுகள்" என்னும் பெயரினுள அடங்கும் நாடு ஆகும்.

1643 ஆம் ஆண்டளவில் ஒல்லாந்து (டச்சு) கப்பல் மாலுமிகளினால் கண்டு பிடிக்கப்பட்ட இந்நாடு 18ஆம் நூற்றாண்டில் பிரித்தானியர்களின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டு அவர்களின் காலனித்துவ நாடாக இருந்து வந்தது.

1879 - 1916 ஆம் ஆண்டு கால இடைவெளிக்குள் பிரித்தானியாவின் ஆட்சிக் காலத்தில் அங்குள்ள கரும்பு, வாழை தோட்டங்களில் தொழில் செய்யவென ஏராளமான தொழிலாளிகளை இந்தியாவில் இருந்து கொண்டு போய் குடியேற்றினர்.

இவ்இந்தியர்களின் வம்சாவளி பெருகி இன்று மக்கள் குடித்தொகையில் அரைப்பங்குக்கு மேல் இருப்பதுடன் இவர்களின் குடிப் பெருக்கத்தினால் இநது மதமும் இந்நாட்டில் தளைத்து ஓங்கி வருகின்றது.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## அருள் விருந்து

-செ. சிவசுப்பிரமணியம்

- வெள்ளைத் துணியில் காணப்படும் சிறிய அழுக்கும் பெரியதாகத் தென்படும். சான்றோர் உள்ளத்தில் இருக்கும் சிறிய குற்றமும் அவர்களுக்கு பெரியதாகத் தென்படும்.
- இருளைக்கொண்டு இருளை அகற்ற முடியாது. வெளிச்சத்தைக் கொண்டு அதை அகற்றலாம். தீமையைக் கொண்டு தீமையை அகற்ற முடியாது. நல்லதைக் கொண்டு தீமையை வெல்லலாம்.
- தியானத்தாலும் ஜபத்தாலும் பழைய தீவினையின் வேகத்தினைத் தணிக்கலாம்.
- நல்லோர் எவ்வுலகில் இருப்பினும், அவர்கள் மனவமைதி நிரம்பப் பெற்றவர்களாய் இருக்கின்றனர்.
- ஓரம் சார்தலினின்றும் கேடுகள் அனைத்தும் உரு எழுகின்றன.

## உன்னை அறிந்தால்

நாம் பிறந்து, வளர்ந்த நாட்டின் அரசியல் அமைப்பு, நடைமுறைப் பண்பாடு, பாகுபாடு, ஏற்ற இறக்கம், பழகும் முறை, செய்யும் முறை... எல்லாமே நாம் புகுந்த நாட்டுடன் ஒப்பிடும் போது மாற்றங்களுடன வேற்றுமைகள் இருப்பதையும்; அதனால் எங்களிற்குள் இன்னுமொரு தோற்றம் உருவாகுவதை தடுப்பது என்பது இலேசான செயலல்ல. உதாரணத்திற்கு இலங்கையில் கணவன், மனைவி உறவைப் பார்த்தால இதனைப் புரிவது இலகுவாக இருக்கும். அங்கு கணவன் மனைவி தங்களிற்கு என்றொரு வரையறைக்குள் வாழ்வதைக் காணலாம். இதற்கு சில விதிவிலக்குகளும் இல்லாமல் இல்லை. இங்கு வாழும தம்பதியினர்களின் வாழ்க்கையில் இருவரின் பங்குகளும் ஓரளவிற்கு சமமானதாக இருப்பதையும் அவ்வாறு இல்லாவிட்டால் ஒருவரின ஏதோவித உதவியில்லாமல் மற்றவரின் தேவைகள் நிறைவேற்றுவது கடினமானதாக இருக்கும். இதில் என்ன வேடிக்கை என்றால் இந்தக குடும்பங்களின் சொந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க, மூன்றாவது ஒருவர் அதில் தலையிடுவதால் அந்தக் குடும்ப வாழ்வில் பாதிப்பு ஏற்படக் காரணமாகிறது. இந்த மூன்றாமவர் மாமன், மாமி, சகோதரங்கள்.... இப்படியான உறவுமுறையில் தோன்றுவர். இந்த மூன்றாமவர் தெரிந்தோ, தெரியாமலோ செய்கின்றார் என்பதல்ல பிரச்சினை. இக்குடும்பம் மூன்றாமவரின் சொல்லிற்கு எப்ப மதிப்புக் கொடுக்க ஆரம்பிக்கின்றதோ அன்றே அக்குடும்பத்தில் பிளவு ஆரம்பிக்கின்றது என்பது உண்மை. 911 இலகுவாக இருக்கலாம். அதன் பாதிப்பு பெரிதாக இருக்கும் என்பது கண்டு அறிந்த உண்மை. சொல்லாத சொல்லிற்கு நாம் ராஜா. சொன்ன செல்லிற்கு நாம் அடிமை. செய்த செயலிற்கு நாங்கள் பொறுப்பு. செய்ய நினைத்து செய்யாத செயலிற்கு நாங்கள் அரசன். நிதானமாக சிந்திக்கவும், சீருடனும் சிறப்புடனும் வாழ நாளை நமதே.

-நெற்றிக்கண்ணன்




# சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr., Scarborough, Ont.



# துரித பணமாற்றுச் சேவை



வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221



# Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)



- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel
- Business

London Life

LIBERTY MUTUAL



© 416 291-0451 EXT. 286 / 905 294 2429 / 416 452 6975

10 MILNER BUSINESS COURT, SUIT 900, SCARBOROUGH



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com



# அறிவும் ஆக்கமும் (75)

-விஜே குலத்துங்கம்

தற்போது கனடாவில் புது 10 டொலர் நோட்டுகள் வெளிவந்துள்ளன. காலம் காலமாக பண நோட்டுகள் போல கள்ள நோட்டுகளும் அச்சடிக்கப்படுகின்றன. எனவே தொழில் நுட்பம் முன்னேறிவர இப்படியான கள்ள நோட்டுகளை தவிர்ப்பதற்காக புதிய வடிவத்தில் நோட்டுகள் வெளிவிடப்படும். கனடாவிட் **Bank of Canada** தான் இந்த நோட்டுகளை வடிவமைக்க, அச்சடிக்க, விநியோகிக்க ஏகபோக உரிமை கொண்டவர்கள். **Bank of Canada** ஒரு நோட்டை வடிவமைக்க பல வருடங்கள் எடுக்கலாம். வடிவம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் இதை அச்சடிக்கும் பொறுப்பை இரண்டு பாதுகாப்பான நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படும். இந்த நிறுவனங்களில் ஒன்று **Canadian Bank Note Company Ltd** மற்றது **BA Banknote** என்ற நிறுவனம்.

முதலில் ஆரம்ப அச்சுக்குரிய பிளேட்டுகள் செய்யப்பட்டு, கையால் இயக்கும் இயந்திரம் மூலம் அச்சடிக்கப்பட்டு நோட்டுகளின் தரம் **Bank of Canada** இனால் பரிசீலிக்கப்படும். இது திருப்திகரமாக இருந்தால் பெரிய அளவில் அடிக்கப்படும். ஒரு **Sheet** இல் 40 நோட்டுகள் என்ற அளவில் அச்சடிக்கப்பட்டு, ஒவ்வொரு தாளும் நன்கு பரிசீலிக்கப்பட்டு நோட்டுகள் அளவாக வெட்டியெடுக்கப்படும். பின்னர் மொன்றியோலிலும், டொரன்டோவிலும் உள்ள விநியோக நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து வங்கிகளுக்கும், மற்றைய நிதி நிறுவனங்களுக்கும் பண நோட்டுகள் அனுப்பி வைக்கப்படும்.



1935ஆம் ஆண்டு அச்சடிக்கப்பட்ட நோட்டுகளில் ஐந்தாவது **King George** இன் 25 ஆம் ஆண்டு நினைவாக 25 டொலர் நோட்டுகள் வெளிவிடப்பட்டன. 1967ஆம் ஆண்டு 1954 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 1 டொலர் நோட்டுகள் கனடாவின் 100வது ஆண்டு நினைவாக நோட்டுகளில் 1967ஆம் ஆண்டு என குறிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. கள்ள நோட்டுகள் பரவலாக வெளிவரத் தொடங்கியதும் 1969 ஆம் ஆண்டு புதிய காசு நோட்டுத் தொடர்கள் வெளிவிடப்பட்டன. இந்த நோட்டுகளில் பல வர்ணங்கள் கொண்ட அலைவடிவமான வடிவங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. கனேடிய முன்னாள் பிரதம மந்திரிகளின் படங்களும் இந்த நோட்டுகளில் புகுத்தப்பட்டன. 1 டொலர் நோட்டுகளைத் தவிர மற்றைய நோட்டுகளில் கறுத்த மையின் பாவனை நிறுத்தப்பட்டது. இந்த தொடரில் 1000 டொலர் நோட்டுகள் அச்சடிக்கப்படவில்லை. 1,2,5,10,20,50,100 டொலர் நோட்டுகள் அச்சடிக்கப்பட்ட கலர் போட்ட கொப்பிகள் வந்ததினால் மேலதிக பாதுகாப்பு அம்சங்கள் சேர்க்கப்பட்டு, 1986ஆம் ஆண்டு புதிய நோட்டுகள் வெளியிடப்பட்டன. இந்த தொடர் **Birds of Canada** தொடர் என்று அழைக்கப்படும். ஒவ்வொரு பணநோட்டுகளின் பின்புறத்திலும் கனடாவின் வெவ்வேறு பறவைகளின் படமும் பெயரும் இருக்கும். உதாரணமாக 5 டொலர் நோட்டுகளின் பின்புறம் **Loon** என்று கூறப்படும் ஒரு வகை வாத்தின் படம் இருக்கும். இந்த Loon பறவையின் உருவம் தான் 1 டொலர் நாணயத்தின் பின்புறம் இருக்கும். இதனால்தான் 1 டொலர் நாணயத்தை **Loonie** (லூனி) என்று அழைப்பார்கள். இந்த 1986ஆம் ஆண்டு நோட்டுகளும் எங்கள் கைகளில் இப்போது உலாவுகின்றது.

இந்த நோட்டுகளில் 2, 20, 1000 டொலர் நோட்டுகளில் எலிசபெத் மகாராணியின் படமும் 5, 10, 50, 100 டொலர் நோட்டுகளில் கனடாவின் முன்னாள் பிரதம மந்திரிகளின் படமும் இருக்கின்றன. இந்தத் தொடரில் 1 டொலர் நோட்டுகளில் அச்சடிக்கப்படவில்லை. பின்னர் அண்மைக் காலங்களில் 2 டொலர் நோட்டுகள் படிப் படியாக அகற்றப்பட்டு அவற்றிற்குப் பதிலாக 2 டொலர் நாணயங்கள் தயாரிக்கப்பட்டு பாவனைக்கு விடப்பட்டு உள்ளது. இந்த வருடம் **Canadian Journey** எனப்படும் புதிய தொடர் நோட்டுகள் அச்சிடப்பட தொடங்கியுள்ளனர். இதன் முதலாவது வெளியீடாக 10 டொலர் நோட்டுகள் வெளிவரத் தொடங்கிவிட்டன. இந்தப் புதிய தொடர் நோட்டுகளில் கனடாவின் சரித்திரம், கலாச்சாரம், சாதனைகள் போன்றவை வெளிக்காட்டப்பவுள்ளன.

புதிய நோட்டுகளில் படங்கள், தோற்றங்கள் வேறுபட்டாலும் பழைய நோட்டுகளின் அளவில்தான் அச்சடிக்கப்படுகின்றன. இப்போது இருக்கும் அதே மகாராணியின் படமும், கனடா, பிரதம மந்திரிகளின் படங்களும் இருக்கும். புதிதாக வந்த 10 டொலர் நோட்டில் பழைய 10 டொலர் நோட்டைப் போன்று கனடாவின் முதல் பிரதம மந்திரியான சேர். ஜோன் மக்டொனால்டின் படம் இருக்கின்றது. தற்போது இருக்கும் நோட்டுகளில் உள்ள பாதுகாப்பு அமசங்கள் பற்றி பார்ப்போம். இவையே கள்ள நோட்டுகளை கண்டுபிடிகக்க உதவுகின்றன.

இவற்றுள் ஒரு அம்சம் **Intaglio Printing** முறையாகும். கையால் செதுக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட மெல்லிரும்பு பிளேட்டுகள் தயாரிக்கப்பட்டு அதன் மூலம் நோட்டுகள் அச்சடிக்கப்படும் போது ஆழமான பகுதிகளின் மூலம் கூடுதலான மை அழுத்தப்பட்டு அச்சடிக்கப்படுவதால் அந்த இடங்களில் நோட்டுகள் தடிப்பாக இருக்கும். எனவே கையால் தடவிப் பார்த்தால் இந்தத் தடிப்புகள் தெரியும். போட்டோ **Copy** இன் மூலம் பிரதிபண்ணினால் இந்தத் தடிப்பை எடுக்க முடியாது.



13 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**

புதிய இடத்தில்

☎: (416) 267-0408


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 116




**இடமிருந்து - வலம்**

1. இந்த துறவி இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் சீடன்
4. அருகே (வல-இட)
5. கோபம்
8. ஆசிரியன் (வல-இட)
10. கோணம் (வல - இட)
11. படகு (வல - இட)
12. ஊன்று
13. உற்பத்தி

**மேலிருந்து கீழ்**

1. விளக்க உரை
2. அருச்சுனன்
3. சோலை
6. மேகம் (கீழ்-மேல்)
7. மரக்கிளை (கீழ் - மேல்)
8. தொடங்கு
9. அடுப்பு
10. முதுமை
11. விரைந்து செல்
12. காலால் செல் (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் MARCH 28, 2001க்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.




**115இல் வெற்றி பெற்றோர்**

1) R. Thevy, Toronto, Ont.
2) P. Dilusan, Scarborough, Ont.



*ஆட்டிறைச்சி வியாபாரத்தல் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!

* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின தொகையில் உயர்ந்தவர்!

* வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்

*733 kennedy Road*

*[Ken-Mark Plaza]*



**ELECTRICAL REPAIRS**

உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்கள் வீடியோக்களை குறைந்த செலவிலும்,சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்

முருகதாஸ் - ☎ **261-6883**


இன்னுமொரு பாதுகாப்பு அம்சம் **OSD** என்று அழைக்கப்படும் **Optical security device** ஆகும். 20 டொலர் நோட்டிலும் அதற்கு மேற்பட்ட பெறுமதியான நோட்டுகளிலும் முன்புறத்தில் பார்த்தால் இடது பக்கம் மேற்புறமாக பொன்னிறம் பச்சை நிறமாக மாறும் ஒரு சிறிய மெல்லிய உலோகத் தகடு ஒன்று நோட்டில் இருப்பதைக் காணலாம். இத்தகடு உலோகமும் **Ceramic** களும் சேர்ந்த ஒரு கலவையாகும். நோட்டை சரித்துப் பார்க்கும் போது ஒளிபட்டு தெறிக்கும் போது தங்க நிறத்தில் இருந்து பச்சை நிறமாக மாறும். இந்த அமைப்பை பிரதி பண்ணுவது கஷ்டம். எனவே கள்ள நோட்டா என்று சந்தேகிக்கும் போது இந்த அமைப்பு இருக்கின்றதா என்று பார்க்க வேண்டும். 5,10 நோட்டுகளில் இது இல்லை. இவற்றைவிட **Planchettes** எனப்படும் பச்சைப் புள்ளிகளும் நோட்டைத் தயாரிக்கும் **Paper pulp** அல்லது காகிதக் கூழில் சேர்க்கப்படும். ஊதா கலந்த கதிர்களை இந்த நோட்டுகளின் மேல் பிடிக்கும் போது இந்த துண்டுகள் பிரகாசிக்கும். மற்றும் படத்திலுள்ள உருவங்களின் கண்களைச் சுற்றிய வட்டங்கள், தலைமயிர் போன்றவை தனித்தனி தெளிவான கோடுகளால் ஆக்கப்பட்டவை. இவற்றை பூதக் கண்ணாடியால் பார்க்கும்போது தெளிவாகத் தெரியும். மற்றும் சாதாரண கண்களுக்கு தெரியாதவாறு மிகச் சிறிய எழுத்துக்களில் பல தடவை **Bank of Canada - Banque du Cana da** என்று எழுதப்பட்டிருக்கும்.

தற்போது வெளிவிடப்பட்டுள்ள புதிய 10 டொலர் நோட்டுகளில் முன்புறத்தில் இருக்கும் மூன்று மேப்பிள் இலைகளை, நோட்டை சரிவாகத் திருப்பிப் பார்க்கும் போது அவை தங்க நிறமாக மாறும். நோட்டை 45 பாகையில் பிடிக்கும் போது மறைந்திருக்கும் 10 இலக்கம் ஒன்று தெரியும்.

இந்த நோட்டில் இருக்கும் நார்கள் சாதாரணமாக பார்க்கும் போது தெரியாது. ஆனால் ஊதாகடந்த வெளிச்சத்தில் பிடிக்கும் போது சிவப்பு நிறமாக பிரகாசிக்கும். சாதாரண கண்களுக்கு தெரியும் நீல நிற நார்கள் பிரகாசிக்கமாட்டாது. தற்போது இந்த 10 டொலர் நோட்டுகள் வெளிவிடப்பட்டுள்ளன. புதிய 5 டொலர் நோட்டுகள் வருட இறுதியில் வெளிவிடப்படும். 20,50,100 டொலர் நோட்டுகள் அடுத்த இரண்டு மூன்று வருடங்களில் வெளிவிடப்படும்.


"அறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் – 361 Highglen Ave, Markham, Ontario, L3S 3M2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ hotmail.com என்ற விலாசத்திற்கு e-mail அனுப்பவும்.

# APPLEMORE AUTOMOTIVE


உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing




- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility




**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple


## வாகனக் குறிப்புகள் உங்களுக்காக



1) வாகனங்களுக்கான Tire ஐ வாங்கும் போது, நீங்கள் Dealor இடம் வாங்குவதை விட அதற்கென உள்ள சில இடங்கள் சிறந்தது. உதாரணத்திற்கு Good Year.

2) Alternator, Starter motor போன்றவற்றை நீங்கள் அவற்றை rebuild பண்ணுபவர்கள் மூலம் வாங்குவதால் பெருமளவில் சேமிக்கலாம்.

3) Spark Plugs ஐ 2 அல்லது 3 வருடங்களில் மாற்றுவதன் மூலம் gas ஐ சேமிக்கக முடியும்.

4) Air filter ஐ 2 வருடங்களுக்கு ஒரு முறை மாற்றுவது நல்லது. நீங்களே செய்யலாம். Canadian Tire or Wall-Mart இல் குறைந்த விலையில் கிடைக்கும்.

5) வாகனங்களை Lease இல் எடுக்கும் போது மிக குறைந்த அளவில் down போடுவது சிறந்தது.

6) அடிபட்ட வாகனங்களை வாங்குவதை தவிர்ப்பது நல்லது.

7) ABS உள்ள வாகனங்களை மிகவும் நிலம் வழுக்கும் நிலையில் உள்ள போது உங்களால் Control பண்ணுவது கடினம். வாகனங்களக்கு இடையில் கூடியளவு இடைவெளிவிட்டு ஒடுவது நல்லது.

8) உங்கள் புதிய வாகனங்களின் Engine ஐ எப்போதும் புதிய பொலிவோடு வைத்திருக்க விரும்பின் winter முடிந்ததும் ஒவ்வொரு வருடமும் Engine shampoo பண்ணுவதன் மூலம் 10 வருடமானாலும் Engine புதிது போன்று தோன்றுவதோடு Oil Leak ஏற்பட்டால் உடன் நிவர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும்.

9) Honda வாகனங்கள் விரைவில் ஒரு விலைத்திட்டத்தில் வரவுள்ளன. அதாவது BMW, SATURN போன்று.


## DAYCARE

- ★ 3 மாதம் - 6 வயதுச் சிறுவர்களுக்குச் சிறந்த பராமரிப்பு.
- ★ காலை 7.00 மணி - மாலை 6.00 மணிவரை.
- ★ இருநேர உணவும், பிற்பகல் சிற்றுண்டியும் வழங்கப்படும்.
- ★ வயதுக்கேற்ப கணிதம், தமிழ், ஆங்கிலம், கொம்பியூட்டர் ஆகியன கற்பிக்கப்படும்
- ★ விளையாடத் தேவையான அனைத்து வசதிகளும் உள்ளன.

★கட்டணம்:-
Week - $ 40.00
Day - $ 10.00
1 Hr - $ 1.50



தொடர்புகளுக்கு: 416-335-5578
McCowan / Sheppard
#704, 360 Pitfield Rd.
Scarborough, ON.



## திருமண சேவை



**உங்கள் விருப்பத்திற்கேற்ப மணமகன் மணமகளைத் தெரிவுசெய்ய சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளுங்கள்**

**தொலைபேசி: 416 261-6219**
**Email:ratnam51@hotmail.com**

## காப்புறுது / இன்சூரன்ஸ்

எங்களில் தங்கியுள்ளவர்களிற்கான நியாயமான பாதுகாப்பு

## LIFE INSURANCE

| Age | $100,00 m/f | $250,000 m/f | $500,000 m/f |
|---|---|---|---|
| 30 | 11.34/9.90 | 17.50/15.00 | 29.25/23.85 |
| 35 | 12,06/10.17 | 18.68/16.43 | 31.50/26.55 |
| 40 | 13.14/12.24 | 22.28/20.00 | 40.00/32.40 |
| 45 | 17.46/14.22 | 30.15/24.98 | 53.35/44.10 |
| 50 | 23.49/17.01 | 42.50/32.18 | 80.00/59.40 |
| 60 | 50.67/30.00 | 92.50/72.00 | 180.00/138.15 |
| 65 | 79.20/54.09 | 175.00/115.45 | 345.00/209.17 |

தொடர்புகளுக்கு: **Paul Ram Narayan ☎: (416) 414-2202**
Life & Investment Broker


10) கோடை காலங்களில் வாகனங்களின் யன்னல்களை திறந்தது வைத்துக் கொண்டு வாகனம் ஓட்டும் போது பாவிக்கும் எரிபொருளைவிட வாகனத்தின் யன்னல்களை மூடிவிட்டு A/C ஐ பாவிக்கும் போது பாவிக்கும் எரிபொருள் குறைவு. *சோதீஸ் (416) 704-1179*

# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்?

- சிவ பஞ்சலிங்கம்



பகுதி(46)

வீதிகளில் வாகனம் செலுத்தும் போது வீதி ஒழுங்கு சட்டங்களை மீறி, அக் குற்ற செயல் நீதிமன்ற விசாரணைக்கு எடுத்து செல்லப்பட்டு, குற்றவாளியாக தீர்ப்பு வழங்கப்பட்டால் தண்டனையினை குறைத்து கொள்வதற்கு யாது செய்ய வேண்டும் போன்ற தகவல்களை கடந்த அத்தியாயத்தில் பார்த்தோம்.

ஆனால் தாங்கள் நிரபராதி என்றோ அல்லது, நிரபராதி என நிரூபிக்கலாம் என்ற நம்பிக்கை தங்களுக்கு இருந்தால் அப்பீல் பண்ணுவது எப்படி என்ற விடயத்தினை இவ் அத்தியாயத்தில் ஆய்வு செய்வோம்.

அப்பீல் என்பது குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டு பதினைந்து நாட்களக்கு இடையில் மனு செய்துவிடல் வேண்டும். மாகாண குற்ற சட்டம் நம் பிரிவின் கீழ் குற்றவாளியாக தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால், முப்பது நாட்களுக்குள் அப்பீல் செய்து கொள்ளல் வேண்டும். இக் குறிப்பிட்ட நாட்களுக்கு இடையில் அப்பீல் மனு கையளிக்க தவறி காலதாமதமாக அப்பீல் செய்ய வேண்டியிருந்தால் அதற்கான காரணத்தினை நீதிமன்றத்திற்கு அறிவித்து நீதிமன்றத்தின் அனுமதியினை முதலில் பெற்று கொள்ள வேண்டும்.

பின்வரும் காரணங்களுக்காக வீதி விபத்து சட்ட ஒழுங்குகளை மீறி குற்றவாளியாக தீர்மானிக்கப்பட்டவர் அப்பீல் செய்யலாம்.

1) “நிரபராதி” என்ற உறுதியான நம்பிக்கை
2) விசாரணை செய்த சமாதான நீதிபதி நம்பாத காரணம்.
3) தீர்ப்பினை பூரணமாக ஏற்றுக் கொள்ள முடியாத நிலைமை.
4) பொலீஸ் உத்தியோகத்தர் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக ஒருதலைப்பட்சமான நிலைமையில் செயல்பட்ட விதம்.
5) விசாரணை திகதியினை மறந்து சமூகம் அளிக்க தவறி குற்றவாளியாகியிருந்தால்.

இக் குற்றவாளியாக தீர்ப்பு வழங்கப்பட்டவர் தாம் நிரபராதி என்பதனை அப்பீல் நீதிமன்றத்தில் நிரூபிக்கும் வரை குற்றவாளியாகவே கருதப்படுவார். மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக அப்பீல் மனு செய்தாலும் பின்வரும் காரணங்களில் ஒன்றினை அடிப்படையாக வைத்து அதனை நிரூபித்து அப்பீல் நீதிமன்றத்தில் ஏற்றுக் கொள்ள வைத்தாலேயே குற்றத்தில் இருந்து தப்பித்து கொள்ள முடியும்.

1) **The trial justice of the peace erred in law and this error resulted in a substantial wrong or miscarriage or justice** (அதாவது “சட்டத்தில் உள்ள தப்புகள்”)

2) **The trial justice of the peace erred in making a finding of fact that was unsupported by any evidence in the transcript** (அதாவது நடந்த சம்பத்தில் உள்ள தப்புகள்)

## சட்டத்தில் உள்ள தப்புகள்:

சமாதான நீதிபதி நீதிமன்ற நடவடிக்கைகளில் மேற்கொண்ட சட்ட ரீதியான தவறுகள், குற்ற செயலின் சில விடயங்களை தப்பாக புரிந்து கொண்டது. எதிர் தரப்பு வாதங்களை கருத்தில் கொள்ளாதது போன்ற விடங்களை இங்கு குறிப்பிடலாம்.

* தீர்ப்பு வழங்கப்பட முன்பு குற்றம் சாட்டப்பட்டவர் தமது நியாயங்களை சமர்பிக்க சந்தர்ப்பம் வழங்க தவறியது.

* குற்றம் சாட்டப்பட்டவர் தன்னிச்சையாக வாதங்களை முன் வைப்பது என்ற முடிவு எதுவும் இல்லாமல் வாதங்களை முன் வைக்க அனுமதித்து.

**(The justice of the peace admitted into evidence a statement made by defendant without fire determining whether it was given voluntarily)**

* சமாதான நீதிபதி வதந்தியான சாட்சியங்களை நம்பி ஏற்று கொண்டது.

* எதிர்தரப்பு வாதம் வலிமை இல்லை என சமாதான நீதிபதி நிராகரித்தது.

போன்ற மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக அப்பீல் செய்து குற்றத்தில் இருந்து தப்பிகொள்ளலாம்.

## நடந்த சம்பவத்தில் உள்ள தப்புகள்:

நடந்த சம்பவங்கள், சாட்சியங்களின் கூற்றுக்களை தப்பாக புரிந்து தீர்ப்பு வழங்கப்பட்டால் மீள் விசாரணையின் மூலம் அப்பீல் நீதிமன்றத்தில் நடந்த சம்பவத்தில் நிரூபித்து நிரபராதி என தப்பித்து கொள்ளலாம்.


நீதிமன்றத்தில் அப்பீல் செய்வதற்குரிய விண்ணப்ப படிவங்களை பெற்று நிரப்பி கையளித்த பின்னர் மீள் விசாரணைக்கு கடிதம் மூலம் அழைப்பு வரும். இவ் அப்பீல் மனு செலவு $50 டொலரில் இருந்து நூறு, இரு நூறு டொலர்கள் வரை வரும்.

ஆனால் அப்பீல் மனு சமர்பிக்க முன்னர் குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டால், அதற்குரிய தண்டனை பணத்தினை செலுத்தி அதன் பற்று சீட்டினையும் இணைத்து கொள்ள வேண்டும். பின்னர் தீர்ப்பு சாதகமாக அமைந்தால் அப் பணத்தினை மீள பெற்று கொள்ள முடியும். ஏதாவது நிதி நெருக்கடி ஏற்பட்டு தண்டனை பணத்தினை செலுத்த முடியாவிடால் அதற்கான ஒரு விதிவிலக்கு அனுமதியினை நீதிமன்றத்தில் பெற்று கொள்ள முடியும். தொடரும்....

மேலதிக தொடர்புகளிற்கு: சிவ பஞ்சலிங்கம் - (416) 321-0999
**(Professional Licensed Instructor In Car & Class Room)**




**BALAN APPLIANCES**



அனைத்து மின் உபகரணங்களின் திருத்த வேலைகள்



※ Stove
※ Washer
※ Microwave
※ Dryer
※ Fridge
※ Dish Washer

☎: 905-619-3457 Pager: 416-379-1071

**இலவச பிரசுரம்**

ஒவ்வொரு மாதங்களிலும் உங்களால் நடாத்த இருக்கும் நிகழ்ச்சியினையும் எங்களிற்கு தெரியப்படுத்துவதன் மூலம், வேறு ஒரு அமைப்பு நடாத்த இருக்கும் நிகழ்ச்சிக்குப் போட்டியாக அமைவதைத் தடுக்கலாம்.

தொடர்புகளுக்கு: **(416) 282-8059**

Neelam SILK

உயர்ரகப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்



முகூர்த்தப் புடவைக்கு இராசியான இடம்

2001 ஆண்டின் புதுப்பட்டு தெரிவுகள் அனைத்தும் இப்பொழுது நீலம் சில்க் இல் கிடைக்கின்றன.

- பாரம்பரிய காஞ்சிபுர பட்டில் - கோல்ட் + சில்வர் கோல்டன் ரிசு, ரிசு புள் BROCADE முகூர்த்த பட்டுகள்.
- காஞ்சி ரிசு புள் BROCADE முகூர்த்த பட்டுகள்.
- சிட்னி சில்க் BUTTER FLY சாறிகள்.
- 2001 டக்சினேற்றி, அநூராகா, ஆரகுடி கோலம், மைசூர்சில்க்.
- இள நங்கையர்கான INTERNET சாறி, KOLAM KARI, CRSAPE POP CORN சாறிகள்.
- 2001 CRYSTAR சில்க் சாறிகள்.
- 2001 CRYSTAL LENGNA SUITS, PUNJABI SUITS சிறுமியர்க்கான SUPER LENGA SUIT.
- ஆண்களுக்கான UK ST. MICHAEL SHIRTS, T. SHIRTS, PANTS.
- மணமகனுக்கு தேவையான சர்வாணி சூட், தலைப் பாகை விற்பனைக்கும், வாடகைக்கும் பெற்றுக் கொள்ளலாம்.

“தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப் புடவை மாளிகை”



’நீலம் சில்க்‘

☎ :(416) 778-7455
FAX: (416) 778-8484
1453 GERRAD STREET EAST (INDIAN BAZZAR)

# பழந்தமிழர் கலாச்சாரமும் அக்குபங்ஷர் வைத்தியமும்

பகுதி:- 07

-*Dr. N. S. Moorthy Ph.D*



பண்டைத் தமிழர் வாழ்க்கை முறையுடனும், மதச் சடங்குகளுடனும் காணப்படும் சில முக்கிய விடயங்களை ஆழ்ந்து நோக்குகையில் அக்குபங்சர் சிகிச்சை முறை எமது வாழ்க்கையுடன் இணைந்து விளங்குவதை சென்ற இதழில் பார்த்தோம். அதைப் பற்றிய மேலதிக தகவல்களை பார்ப்போம்.

## சிலம்பு:

பழந்தமிழ் பண்பாட்டில் முக்கிய இடம் வசிக்கும் ஆபரணங்களில் சிலம்பும் ஒன்றாகும். சிலம்பின் பெயரால் ஓர் இலக்கியமே சிலப்பதிகாராமாக மலர்ந்துள்ளது என்றால் அதன் மகிமையை சொல்லவும் வேண்டுமா? கற்பின் தெய்வமான கண்ணகி முதல் சாதாரண பாமரர் வரை இவ்வாபரணத்தை அணிந்து வந்துள்ளார்கள். காலின் கணுக்கால் பகுதியில் இது அணியப்படும் போது அப்பகுதியினூடாகச் செல்லும் சிறுநீரகம், ஈரல், இரப்பை போன்ற சக்திப் பாதைகளை தூண்டக் கூடியதாக உள்ளது. அது மட்டுமன்றி கால் பகுதியில் வரும் வாத நோய்கள் மூட்டுவலி போன்றவையையும் வராமல் பாதுகாக்கின்றது. ஷநிரைகழல் அரவம் சிலம்பொலி அலம்பும் நிமலர்’ என சிவனைப் பாடியது இதனால் தானோ?

## பொட்டு வைத்தல்:



நெற்றியின் மத்தியில் பொட்டு வைத்தல் தமிழர்களுக்குரிய ஒரு பண்பாட்டு நடைமுறையாகும். பொட்டைக் கொண்டே அடையாளம் காணப்படும் இனமாக தமிழினத்தைக் கொள்ளாலாம். நெற்றியின் இரு புருவங்களுக்கும் மத்தியில் மூளையுடனும் நரம்பு மண்டலத்துடனும் தொடர்புள்ள முக்கிய சம புள்ளி அமைந்துள்ளது. இப் பகுதியில் ஊசியைச் செலுத்துவதன் மூலம் தீவிர தலைவலி, ஒற்றைத் தலைவலி, காக்கை வலிப்பு, பீனிசம், மனச்சோர்வு, தூக்கமின்மை போன்ற நோய்நிலைகளைப் குணப்படுத்தலாம். எனவேதான் இப் புள்ளியில் சந்தனம் போன்ற குளிச்சியான பதார்த்தங்களைக் குழைத்து பொட்டு இடுவதன் மூலம் மனச் சாந்தியும் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றது. அது மட்டுமின்றி மனோவசிய சாத்திரத்திலும் இப்புள்ளி முக்கிய இடம் வகிக்கின்றது. நெற்றியில் பொட்டு வைத்திருப்பவர்களை வசியம் செய்தல் சிரமம் எனக் கூறப்படுகிறது. ஆன்மீகத் துறையிலும் அறிவையும் ஞானத்தையும் பிரதிபலிக்கும் புள்ளியாக இது கணிக்கப்படுகிறது. மங்கலத்திற்கும் சுபகாரியங்களுக்கும் அடையாளமாகவும் இது திகழ்கிறது.

## குட்டுதல்:



குட்டிக்கும்பிடுதல்

தமிழர்கள் குறிப்பாக சைவமதத்தைச் சேர்ந்தவர்கள் தாம் வணங்கும் முறைகளில் ஒன்றாக நெற்றியின் இரு புறமும் தலையில் குட்டி வணங்கு வதைக் கைக் கொண்டுள்ளார்கள். எமக்கு அதிக தலைவலி வந்தாலும் நெற்றியின் இரு புறமும் கையை வைத்து அழுத்துகின்றோம். தலைவலிக்கு ஏதாவது மருந்து தடவுவதென்றாலும் பற்றுப் போடுவதென்றாலும் இப் பகுதியிலேயே பூசுகின்றோம். அதிக சிந்தனையாகக் கூட இருந்தாலும் நெற்றியிலே அழுத்துகின்றோம். எனவே எம்முடலில் நெற்றி ஓர் முக்கிய இடத்தை வகிக்கின்றது. சைவர்கள் திருநீறணியும் புனித இடமாகவும் இது உள்ளது. இஸ்லாமிய மதத்ததில் கூட ஒருவர் எவ்வளவு தூரம் தமது மதக் கடமைகளை செய்கின்றார் என்பதை அவரது நெற்றியை பார்த்தே கூறி விடலாம். தினமும் ஐந்து வேளை தொழுகை நடத்தும் ஒருவரது நெற்றியில் அடிக்கடி மண்டியிடுவதனால் ஏற்படும் தழும்பைக் ககாணலாம். சைவ மதத்தில் கூட கூறப்படும் அட்டாங்க நமஸ்காரம், பஞ்சாங்க நமஸ்காரம் போன்றவையும் கூட நெற்றி நிலத்தில் முட்டும் வணக்கமுறைகளாக கூறப்பட்டுள்ளன. எனவே மேற்கூறியவற்றிலிருந்து நெற்றியின் மகிமை விளங்குகின்றது. எண்சாண் உடம்புக்கும் சிரசே பிரதானமானது மூன்று முதியோர் வாக்காகும். நெற்றியின் இரு புறமும் மூளையையும் ஈரலுக்கும் அடுத்துள்ள பித்தப்பையையும் தொடர்புபடுத்தும் சக்திப் பாதைகள் செல்கின்றன. இவற்றைத் தூண்டுவதன் மூலம் அதாவது குட்டுவதன் மூலம் மேற்படி உறுப்புக்கள் தூண்டப்படுவதுடன் நோய்நிலைகளும் நிவர்த்தி செய்யப்படுகின்றன. இதையறிந்துதானோ என்னவோ பண்டைத்தமிழர்கள் தலையில் குட்டும் வணக்க முறையை கைக்கொண்டார்கள். என எண்ண இடமுண்டு. நம் நாட்டில் பல ஆசிரியர்கள் இதை அறிந்தோ அறியாமலோ மாணவர்களைக் கட்டி தண்டனை வழங்கிய காலத்தையும் மறக்க முடியாது.



தொடரும்.......

### பிறவிப் பயன்

உலகில் மக்கள் அனைவரும் விரும்புவது இன்பம் விரும்பாதது துன்பம். ஆனாலும், மக்கள் விரும்பாத நிலையிலும் துன்பம் விரும்பி வந்து அவர்களைப் பற்றுகின்றது. துன்பத்துள் சிக்கித் துயர்ப்படச் செய்வது விலங்கியல்பு வாழ்வே. துன்பச் சேற்றில் வீழ்ந்து வருந்துவது மனித வாழ்வின் நோக்கமன்று. மனித வாழ்வின் பயனுமன்று. அன்பினடியாக அமைவுறுகின்ற அருள் வாழ்வின் வழி நின்று இன்பத்தில் திளைப்பதே மனித வாழ்வின் நோக்கமும், பயனுமாம்.

**Safety Truck**

**Training School Ltd.**

**Training & Trucking Classes A, D & Z**

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ்
TRUCK DRIVING பயிற்சி இடம் (7ஆம் ஆண்டு)
வாரத்தில் எழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

**We accept Welfare & Unemployment Insurance**




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**In Classes**

- 365 (Learning Permit)
- Lock Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்

**YOGAN SOCKALINGAM**

Truck Driving போதனாசிரியர்

(13 Years Canadian Experience with Trucks)

**Tel: (905) 793-9546 / (416) 616-5979**

**250 Summerlea Road, Brampton, ON**


YARL

**WINDOW COVERING**

**1530 WARDEN AVENUE**

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இப்பொழுதே தொடர்புகொள்ளுங்கள்

**CUSTOM MADE..**
* VENETIAN BLINDS
* VERTICAL BLINDS
* ROLLER BLINDS
* PLEATED SHADES
* DRAPERIES



*இருபத்தாறு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் திரைச் சேலைக் தைத்தக் கொடுக்கப்படும்*

தொடர்புகளுக்கு: என். செல்வம்
**(416) 383-0205**
**(416) 650-0377**

**FREE ESTIMATE**

# விளையாட்டுத் தகவல்கள் (71)

-எஸ். கணேஷ்








### உதைபந்தாட்ட உலகின் விடிவெள்ளிகளின் வரிசையில்
### Franz Beckenbauer & Johan Crruyff

உலக தமிழோசையின் கடந்த சில இதழ்களுக்கு முன்பு உதைபந்தாட்ட உலகின் விடிவெள்ளிகளாக திகழும் PELE, MARADONA ஆகிய இருவரையும் பற்றி பார்த்தோம். அவ் இதழில் 20ஆம் நூற்றாண்டின் சரித்திர நாயகர்களாக Pele, Maradona, Franz Bekenbauer, John Cruyff ஆகியோரை குறிப்பிட்டிருந்தோம். பல வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இவ் இதழில் Franz Bechnbuer, Johan Cruyff ஐ பற்றிப் பார்ப்போம்.

பிரேசில் ஐச் சேர்ந்த Pele ஐயும், ஆர்ஜன்ரீனாவைச் சேர்ந்த மரடோனாவும் அமெரிக்காக் கண்டத்தைச் சேர்ந்தவர்கள். ஜேர்மனியைச் சேர்ந்த Franz இலும் Holland ஐச் சேர்ந்த Johan இம் ஐரோப்பா கண்டத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இருவரும் பிலா க்கும் மரடோனாவுக்கும் எள்ளளவும் சளைத்தவர்கள் இல்லை என்றால் மிகையாகாது.

European உதைபந்தாட்ட சரித்திரத்தில் இவ்விரண்டு பெயர்களும் Franz / Cruyffம் "Geniuses" என்று பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவர்கள். 1970களிலும் 1980களிலும் உலகில் உதைபந்தாட்டத்தில் பல சாதனைகளை நிரூபித்தவர்கள். ஐந்து தடவைகள் European 'Footballer of the year' விருதுகளைப் பெற்றனர். Cruff 1971இலும் 73 இலும் 74இலும் Franz 1972இலும் 1975இலும் 1976இலும் பெற்றனர். Cruyff அவர்கள் Holland இன் புகழ் பெற்ற கழகமான Ajax கழகத்திற்கு (3) தடவை தொடர்ந்து 1971, 72, 73 European Cup வெற்றிகளைப் பெற்றார். இதேபோல் 1974, 75, 76 ஜேர்மனியின் புகழ்பெற்ற Bayern Munich கழகத்திற்கு Franz Becken Bauer European Cup வெற்றிகளை பெற்றுக் கொடுத்தார்.



1947ஆம் ஆண்டு April 25ஆம் திகதி Holland நாட்டில் Amsterdam நகரில் ஒரு ஏழைத் தாயின் வயிற்றில் Johan Cruff பிறந்தார். இவருக்கு 1999ஆம் ஆண்டு Europe's Top Player of the Century விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். 17வயதில் தன் முதலாவது பிரவேசத்தை Ajax கழகம் மூலம் ஏற்படுத்திக் கொண்டார். முதல் வருடத்திலேயே 33 கோல்களைப் போட்டு ஒரு சாதனையை ஏற்படுத்தினார். 1970ஆம் ஆண்டு Los Angeles இக்கும் 1984ஆம் ஆண்டு Washington க்கும் North American League ஆண்டு **வரை** Ajax க்கும் 1992வரை Barcelonaக்கும் விளையாடி European Cup Winners, European Champion Cup ஆகிய விருதுகளைப் பெற்றுக் கொடுத்தார்.



Europe's உதைபந்தாட்டத்தில் மிகமுக்கியமான உதைபந்தாட்ட விளையாட்டு அமைப்பு முறையில் மிகப் பெரிய மாற்றத்தை அதாவது "Sweeper" என்ற பதவியை முதன்முதலில் அறிமுகப்படுத்தி அதை தனது விளையாட்டுத் திறன் மூலம் நடைமுறைப்படுத்தியும் காட்டிய ஒரு உன்னத வீரர் ஆகும். "Sweeper" அல்லது "Libero" என இவ் Position இல் விளையாடும் ஒரு வீரர் Defender ஆக மட்டுமல்லாமல் விளையாட்டு மைதானம் முழுவதுமே ஆக்கிரமித்து Left Wing ஆகவும் Right Wing ஆகவும் Center Half ஆகவும் Foward ஆகவும் பலதரப்பட்ட இடங்களில் விளையாடி முழு ஆட்டத்திலும் எல்லாம் வல்ல நாயகனாக திகழ்ந்து தனது திறமை மூலம ஒரு புதிய அமைப்பு முறையை உலகத்திற்கு எடுத்துக்காட்டியவர் Franz Becken Bauer என்றால் மிகையாகாது.

உலகத்திலேயே கப்டன் ஆகவும் Coach ஆகவும் World Cup ஐ வென்ற ஒரே ஒரு உதைபந்தாட்ட "Geniuses" என்றால் இவரேயாகும். 1974ஆம் ஆண்டு ஜேர்மனிக்கு கப்டன் ஆக இருந்து World Cupஐ பெற்றவர். 1990ஆம் ஆண்டு ஜேர்மனிக்கு Coach ஆக இருந்து World Cup ஐ பெற்றுக் கொடுத்தவர் இவராகும்.

1945ஆம் ஆண்டு September 11ஆம் திகதி ஜேர்மன் நாட்டில் Munich நகரத்தில் பிறந்த இவர் 17வயதிலேயே Bayern Munich கழகத்திற்கு விளையாடத் தொடங்கினார். பலதடவைகள் Europe's Top Player விருதுகளை வென்ற இவர் ஜேர்மனியின் புகழ் பெற்ற Bundesliga Champion விருது பலதடவைகள் உலகப்புகழ் பெற்ற Bayen கழகத்திற்கு பெற்றுக் கொடுத்தார்.






இதுமட்டுமல்லாமல் 1992ஆம் ஆண்டு அமெரிக்க National Team இக்கு Technical Director ஆக இருந்து முதன் முதலில் அமெரிக்காவையும் உதைபந்தாட்டத்தில் பளிச்சிட வைத்தவர். 19வயதில் ஜேர்மன் நாட்டிற்காக விளையாடத் தொடங்கிய இவர் ஜேர்மன் உதைபந்தாட்ட ரசிகர்களால் "Kaiser Franz" என அழைக்கப்பட்டார்.

Johan உம் Franz உம் தற்போது FIFA உதைபந்தாட்டக் குழுவில் ஆலோசகர்களாக கடமையாற்றுகிறார்கள்.

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

—தொகுப்பு - பரம்

### 1984

1. அன்புள்ள மலரே
2. அன்புள்ள ரஜினிகாந்த்
3. அம்மா இருக்கா
4. அன்பே ஓடிவா
5. அழகு
6. அம்பிகை நேரில் வந்தாள்
7. அந்த உறவுக்கு சாட்சி
8. அந்த ஜுன் 16ம் நாள்
9. அச்சமில்லை அச்சமில்லை
10. ஆயிரம் கைகள்
11. ஆலயதீபம்
12. ஆத்தோர ஆத்தா
13. 24 மணிநேரம்
14. இருமேதைகள்
15. இது எங்கபூமி
16. இங்கேயும் ஒரு கங்கை
17. உள்ளம் உருகுதடி
18. உங்க வீட்டு பிள்ளை

...ன்னை நான் சந்தித்தேன்

...றவைக் காத்த கிளி

21. ஊமை ஜனங்கள்
22. ஊருக்கு உபதேசம்
23. எனக்குள் ஒருவன்
24. எழுதாத சட்டங்கள்
25. ஏதோ மோகம்
26. ஓசை
27. ஓ மானே மானே
28. கல்யாணக்கனவுகள்
29. கடமை
30. காதுல பூ
31. காவல் கைதிகள்
32. குடும்பம்
33. குழந்தை ஏசு
34. குயிலே குயிலே
35. குவா குவா வாத்துக்கள்
36. கைராசிக்காரன்
37. கைகொடுக்கும் கை
38. கொம்பேறிமூக்கன்
39. சரித்திரநாயகன்
40. சபாஷ்
41. சங்கநாதம்
42. சங்கரி
43. சத்தியம் நீயே
44. சட்டத்தை திருத்தங்கள்
45. சாந்தி முகூர்த்தம்
46. சிறை
47. சிரஞ்சிவி
48. சிம்மசொப்பனம்
49. சுக்ரதிசை
50. சுமங்கலிக் கோலம்
51. தங்கக்கோப்பை
52. தர்மகர்த்தா
53. தங்கமடி தங்கம்
54. தராசு
55. தம்பிக்கு எந்த ஊரு
56. தலையணை மந்திரம்
57. தாவணிக் கனவுகள்
58. திருப்பம்
59. திருட்டு ராஜாக்கள்

மீனா



"அன்புள்ள ரஜனி காந்த்" குழந்தை நட்சத்திரம் மீனாவை மையமாகக் கொண்ட கதையமைப்புள்ள இந்தப் படத்தில் ரஜனியும் பாக்கியராஜ்ஜும் சேர்ந்து நடித்துள்ளனர். இதில் பாக்கியராஜின் நகைச்சுவை படத்தில் முக்கிய அம்சமாயுள்ளது குறிப்பிடத்தக்கது.

"அச்சமில்லை அச்சமில்லை" பாலச்சந்தரின் கைவண்ணத்தில் உருவான இந்தப் படத்தில் ராஜேஷ் சரிதா ஆகியோர் நடித்திருந்தனர். பெருவெற்றி கொண்ட இப்படம் தமிழக அரசின் விருதினைப் பெற்றதாகும்.

"24 மணிநேரம் 100வது நாள் " மணிவண்ணணின் கைவண்ணத்தில் உருவான இப்படங்கள் ஒரே ஆண்டில் வெளியானது.

சத்தியராஜ்



'100வது நாள்' படத்தின் மூலம் நடிகர் சத்தியராஜ்ஜுக்கு ஒரு திருப்புமுனையாக இருந்தது. "என் Character ஐ புரிஞ்சிக்கமாண்டேங்கிறியே என்ற வசனம் பேசி மிகவும் அட்டகாசமாக நடித்திருந்தவர் சத்தியராஜ் ஆகும். 24 மணி நேரம் படத்தில் மோகன் கதாநாயகன். சத்தியராஜ் வில்லன் 100வது நாளில் விஜயகாந்த் கதாநாயகன் ஆகவும் மோகன் வில்லனாகவும் நடித்திருந்தனர். எது எப்படி இருந்தாலும் இப்படத்தின் மூலம் வெற்றி கண்டவர் மணிவண்ணனும் சத்தியராஜ்ஜும் தான். இது தவிர இதே ஆண்டில் வெளியான January 1st உம் மணிவண்ணன் கைவண்ணத்தில் உருவானது. விஜயகாந்த் கதாநாயகன் ஆகவும் சத்தியராஜ் வில்லனாகவும் நடித்திருந்தனர். ஆக மொத்தம் 3 வெற்றிப் படங்களை மணிவண்ணன் டைரக் பண்ணியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வேலவன் பிலிம்ஸ் ஆதரவில் சினிமாப் போட்டி

இப்போட்டியில் வெற்றிபெறும் முதல் மூவருக்கு 'வேலவன் பிலிம்ஸ்' ஸ்தாபனத்தாரினால் 3 DVD வழங்கப்படும்.



*சினிமா போட்டி # 5*

1. 'சுமங்கலி', 'சந்திப்பு' படங்களின் நாயகன், நாயகி பெயர்?
2. நடிகர் நாகேசின் மகன் ஆனந்தபாபு முதல் முதல் 'Disco' ஆட்டக்காரராக அறிமுகமாகி: ய தமிழ் படம் எது?
3. 'உள்ளம் கொள்ளைபோகுதே' படத்தின் இசையமைப்பாளர் யார்?

** சினிமாப் போட்டி #4இன் விடைகள்*

1.தேவா 2. நடிகை ராதா

3. சரத்குமார், குஷ்பு


**போட்டி #3இல் வெற்றி பெற்றவர்கள்*

1. T. Kamal, Scarborough

இதற்குரிய விடைகளை March 15, 2001 இற்கு முன்பாக 'உலக தமிழோசை' இன் விலாசத்திற்கு அல்லது தொலைநகல்- Fax: (416) 282-4978 இற்கு அனுப்பலாம்.


YARLCAN
STEAM CLEANING

CARPET CLEANING



DUCT CLEANING

உங்கள் சகலவிதமான தேவைகளுக்கும் அழையுங்கள்
மோகன்
Tel: (416) 724-9085
Cell: 721-9709



கலைமகள்
புத்தக நிலையம்

*சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
தமிழ்ப் புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
*இலங்கை/இந்திய பத்திரிகைகள்
*குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
*CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

594 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 921-5018

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH, ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494



THE CHILDREN EDUCATION TRUST OF CANADA
(CET)
சீலன். A (சிவா)
TEL:(416) 451-0271 PAGER: (416) 980-9836
email: seelany2k@email.com

உங்கள் குழந்தையின் எதிர்கால கல்வியில் ஒரு சிறு தொகையை முதலிடுவதுடன் கனேடிய அரசின் கல்விக்கான மானியம் வருடத்திற்கு

$400 இலவசம்



அரச அங்கிகாரம் பெற்ற புலமைப் பரிசில் சேமிப்பு திட்டம். (R.E.S.P)

THE ROYAL BANK
THE ROYAL TRUST
THE SCOTIA MCLEOD

TWO YEARS DIPLOMA ஐ வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் சகல புலமைப் பரிசில்களையும் பெற முடியும்.

இன்னும் பல சலுகைகள் உண்டு

உலகின் எந்தப் பாகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பெறலாம்.

இலவச ஆலோசனைகள் பெற எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்

# 21ஆம் நூற்றாண்டில் கணணி இல்லாமல் மனிதன் வாழமுடியுமா?

-ராஜா சொக்கலிங்கம் raja@systemsplus.net
Computer Consultant



## பகுதி 24

## இசையும் கணணியும்

இசைத் துறையிலும் கணணியின் ஆதிக்கம் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. புதிய வடிவமான MP3 என்று சொல்லப்படும் புதிய யுகம் தான் மிக சிறப்பாக இயங்கிக் கொண்டு இருக்கின்றது. ஆரம்பகாலத்தில் கணணியில் அதாவது Type செய்து அதை Monitor இல் பார்க்கக் கூடிய வசதி இருந்தது அதன்பின்பு அதை Printer மூலம் அதை Print பண்ணக் கூடிய வசதி இருந்தது. இவை இரண்டும் தான் கணணியில் எமக்கு பயனுள்ளதாக இருந்தது. அதன் பின்புதான் Multi Media என்று சொல்லப்படும் ஒலி அமைப்பையும் சேர்ந்த கணணிகள் வெளிவரத் தொடங்கின. இன்னும் சுருக்கமாக சொல்லப்போனால் கணணிக்கு வாயும் காதும் அப்பொழுதுதான் முளைத்தது. அதன் பின்பு மனிதனுடன் முழுத்தொடர்பு அதாவது கண், காது இரண்டிற்கும் தொடர்புடையதாக இருந்தது. கணணி ஆரம்பத்தில் CDக்களில் பாட்டுக் கேட்பதும் சிறிய சிறிய Music File களை Recoard பண்ணுவது ஆரம்பத்தில் இருந்து பின்பு internet காலத்தில் internet வழியாக ஒலிபரப்பக்கூடிய வானொலிகள் பாடல்கள் இவைகளைக் கேட்பதற்கும் இந்தக் கணணி உபயோகமாக இருந்து வருகின்றது. Internet **மூலம்** பெருந்தொகையான வானொலி நிலையங்கள் இயங்கிக் கொண்டு இருக்கிறது. நீங்கள் கண்டம் விட்டு கண்டம் அல்லது ஒரு மூலையில் இருந்து இன்னுமொரு மூலையில் இந்த ஒலியுருவைக் கேட்பதற்கு கணணியில் ஒலியமைப்பு உபயோகமாகி உள்ளது.



இந்த ஒலியமைப்பை கேட்பதற்கு இரண்டு பெரும் Programகள் பயன்படுத்தப்படுகின்றது. ஒன்று Real Audo (www. real.com) மற்றையது media players (www.microsoft.com) இது microsoft இனுடையது. இந்த இரண்டு பெரும் softwareகளை கொண்டுததான் இந்த உலகத்தின் வானொலி நிலையங்கள் மட்டுமல்ல பல வகையான ஒலியமைப்புக்களையும் வானொலி மூலமாக கேட்பதற்கு வாய்ப்பாக இருக்கின்றது. இதன் பின்பு இப்பொழுது உள்ள ஒரு புதிய அமைப்பு MP3 என்ற புதிய வடிவம். ஒலிவடிவம் தான் மிக பயனுள்ளதாக இருக்கின்றது. (www.mp3.com) இதனுடைய புகழிற்கும் அதிக உபயோகத்திற்கும் முக்கியமான காரணம் என்னவென்றால் இதனுடைய சிறப்பு அமைப்பு. அதாவது அதாவது ஒரு பாடலை ஒரு 5 நிமிடப் பாடலை கணணியில் சேமித்து வைப்பதற்கு எவ்வளவு இடத்தை எடுத்து கொண்டதோ அதைவிட பல மடங்கு குறைவான இடத்தை எடுத்துக் கொண்டு சிறந்த தரத்தைக் கொடுப்பதுதான் இந்த mp3 . அதற்கு எடுத்துக்காட்டாக சொல்லப் போனால் ஒரு 5 நிமிடப்பாடலை கணணியில் சேமிப்பதற்கு 50 mb இடத்தை எடுக்கின்றது. ஆனால் இந்த mp3 வடிவத்தில் அதே பாடலை சேமிப்பதற்கு 5mb இடத்தைத் தான் எடுக்கின்றது. எவ்வளவு இடம் மீதப்படுகின்றது என்று நீங்கள் அறிந்து கொள்ளலாம். அது மட்டும் அல்லாமல் தரத்திலும் குறைவானது இல்லை இந்த mp3. இப்படி புகழ்பெற்ற mp3 வடிவ ஒலியமைப்பு இப்பொழுது walkman என்று சொல்லப்படும் கையடக்க ஒலிவடிவ அதாவது இந்த walkman இல் கூட mp3 பாடல்களைக் கேட்கக் கூடிய வசதிகள் உள்ளன.

ஒரு சாதாரண CD இல் 15 அல்லது 20 பாடல்கள் பதிவு செய்து வருவது உங்களுக்கு தெரியும். ஆனால் mp3 அமைப்பில் பதிவு செய்தால் ஏறக்குறைய 150 பாடல்களை பதிவு செய்யக் கூடியதாக இருக்கும். இதுதான் இந்த mp3 இன் சிறப்பு. இன்னொரு சிறப்பு அதன் தரத்தில் எதுவித குறையும் இருக்காது. முன்பெல்லாம் mp3 கணணியில் மட்டும தான் கேட்கலாம் என்ற காலம் வந்துவிட்டது. கணணி மூலமாக பதிவு செய்யப்பட்ட அந்த mp3 பாடல்களை mp3 player இல் கேட்க முடியும். இதனால் இந்த mp3 ஐ எப்படிப் பதிவு செய்வது எப்படி கேட்பது என்பதை தெரிந்து வைத்துக் கொள்வது நல்லது.

ஞானம்ஸ் ஸ்ரூடியோ
Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12
Professional Photographer - கதிர்
☎: (416) 750-8118
2381 EGLINTON AV. E.
KENNEDY/ EGLINTON, SCARBOROUGH



### உங்களுக்கு தெரியுமா?

* அதிக நாட்கள் விண்வெளியில் இருந்து சாதனை புரிந்தவர் சோவியத் யூனியனைச் சேர்ந்த யூரி ரொமமென்கோ என்பவர்தான். இவர் விண்வெளியில் 228 நாட்கள் இருந்தார்.
* உலகத்திலேயே மிகவும் அதிகமான புத்தகங்களை எழுதியவர் அலெக்ஸாண்டர் டூமாஸ் என்ற எழுத்தாளர்தான். இவர் மொத்தமாக 1200 புத்தகங்களை எழுதியுள்ளரர்.


AVIS RENT A CAR
We try harder
∸ Daily, weekly, weekend and monthly rates
∸ Unlimited km, rates available on cars
∸ Large selection of vehicles
∸ Emergency road service
∸ Major credit cards accepted
Great Rates
Quality Service.
We feature GM products
FOR RESERVATIONS & DETAILS CALL:
1-800-879-2847
தமிழில் சேவைக்கு
விக்கி ☎ :(416)441-1818
1345 Lawrenve ave. E
Scarborough, ont.
அரவிந்தன் ☎ :(416)724-2847
4352 Kingston Rd,
Unit 78
Scarborough, Ont
JOHN ☎ (416) 233-2847
5481 Dundas St. W
Etobicoke, Ont.




### தெரிந்து கொள்ளுங்கள்

☛ அமெரிக்காவில் வெள்ளை மாளிகையில் வசித்த முதல் ஜனாதிபதி ஜான் டேம்ஸ் (John Adams) 1800-இல்.

Lowest Prices With Quality Satisfaction Guaranteed
SABESAN'S
சபேசன்ஸ
GENERAL & CUSTOM CONTRACTORS
Roofing
Mattress




EVERYTHING YOU NEED YOUR HOME IMPROVEMENT UNDER



Kitchen Cabinet
Flooring / Carpet
BED ROOM SETS
Leather Sofa
PAINT SALE
☎: (416) 605-1990
562-9090
ANICKO INTERIOR INC.
390 Progress Ave., unit #4, Scarborough, ON

## அந்நியர்கள்:-பூமியின் சொந்தக்காரர்கள்

தருபவர்:- கனி



மதங்களின் பொதுவான கொள்கையின் படி இறைவனால் படைக்கப்பட்ட மனிதனே ஏதோ ஒரு வகையில் இந்தப் பூமியின் சொந்தக்காரன் ஆகின்றான். மிக ஆழமான தத்துவக் கொள்கையின் அடிப்படையில் அமைந்த இந்து மதக் கொள்கையின் படி மனிதனனின் தோற்றம் அவ்வளவு தெளிவாக இல்லை என்றேதான் கூறவேண்டும். பஞ்ச பூதங்களின் சேர்கையினாலேயே மனிதன் உட்பட எல்லா உயிரினங்களும் தோன்றின எனப் பொதுவாக இந்து மதம் கூறுகின்றது. காற்று, நீர், நிலம், நெருப்பு, ஆகாயம் என்ற இந்த ஐம்பூதங்களின் வெவ்வேறு விகிதாசாரத்தின் சேர்கையில் வெவ்வேறு உயிரினங்கள் தோன்றின எனக் கூறுகின்றார்கள். இது ஓரளவுக்கு விஞ்ஞானக் கருத்துடன் ஒத்துப்போவதை நாம் அதானிக்க முடிகின்றது. இயற்கையில் அமைந்த சடப்பொருள்களுடன் சக்தியினது காலம் காலமான சேர்க்கையினாலேயே வேதியல் மாற்றத்தினாலேயே உயிரினங்கள் தோன்றின என விஞ்ஞானம் கூறுகிறது. ஆயினும் மனிதன் பூமியிலேயே படைக்கப்பட்டானா அல்லது வேறு எங்கேயோ படைக்கப்பட்டுப் பூமிக்குக் கொண்டு வரப்பட்டானா என்று இந்து மதம் தெளிவாகக் கூறவில்லை. இந்த வகையில் மனிதன் பூமியின் சொந்தக்காரனா அல்லது அந்நியனா எனத் தெளிவுபடுத்தப்பட முடியவில்லை.

கிறிஸ்தவ, இஸ்லாம், யூத மதத்தினரின் கூற்றுப்படி ஆதாம் மனித இனத்தின் முதலாவது ஆள் ஆகின்றார். கிறிஸ்தவர்களின் விவிலியத்தின்படி ஆதாம் பூமியில், பூமியின் மண்ணில் இருந்து படைக்கப்பட்டவனாகிறான். இந்த ஆதாமின் அடியில் இருந்து வந்தவர்களே இன்று பூமியில் வாழும் பல்லின மக்களுமாகும். இதன் படி பார்ப்போமே ஆகில் இன்று பூமியில் வாழும் நாம் அனைவரும் இந்த மண்ணின் அசல் சொந்தக்காரர்கள். ஆகின்றோம். இம் மண்ணில் மைந்தர்களாகிய நாமே "பூமியின் சொந்தக்காரர்கள்" எனப் பெருமைப் படக் கூடியவர்களாகின்றோம். ஆனால் இஸ்லாம் கொஞ்சம் வேறு விதமாகக் கூறுகிறது. நாம் அனைவருமே ஆதாமின் பரம்பரைகள் தான் என்பதில் வேறுபாடு இல்லை. ஆனால் ஆதாமில் தான் பிரச்சனை வருகிறது. ஆதாம் பூமியில் படைக்கப்படவில்லை. மாறாக பரலோகத்திலே படைக்கப்பட்ட ஆதாம் அவனது மீறுதலின் காரணமாகப் பூமிக்குத் தள்ளப்பட்டான் என்கிறது இஸ்லாம். பரலோகத்தில் இருந்து துரத்தப்பட்ட ஆதாம் பூமியில் முதன் முதலில் கால் பதித்த இடம்தான் "சிவனொளிபாதமலை" என்கிறார்கள் சிலர். இதனாலேயே சிவனொளிபாத மலை ADAM'S PEAK எனப்படுகிறது. சிவனொளிபாத மலையில் காணப்படும் பாதச் சுவடு ஆதாமின் பாதச் சுவடே என்கிறார்கள் இவர்கள். ஆதாம் பூமிக்கு வரும்போது பூமியில் எந்த உயிரினமுமே இருந்ததில்லை எனவும் அவர்கள் கூறுகின்றார்கள். இதன்படி பார்த்தால் ஆதாமில் இருந்து வந்த மனித இனம் அதாவது நாங்கள் எல்லோருமே இந்தப் பூமியின் சொந்த மைந்தர்கள் அல்ல. பூமியை முற்று முழுதாக ஆக்கிரமித்துக் கொண்ட "அந்நியர்கள்"- ALIENS ஆகின்றோம். இஸ்லாம் மதத்தை நம்புகின்றவர்கள், ஏற்றுக் கொண்டவர்கள் எல்லோருமே இதனை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர்.

எனவே இஸ்லாம் மதம் கூறுவதன் படி பூமியின் முதல் அந்நியர்கள் - ALIENS மனிதர்களாகிய நாம் ஆகின்றோம். ஆதாம் பூமியை வந்தடைந்த போது பூமி வெறும் கட்டாந்தரையாகவே இருந்திருக்கிறது. ஆதாம் வந்திறங்ககிய இடம் வேறு சிலர் "மக்கா" என்று கூறுகின்றனர். எதுவாயினும் உயிரினங்கள் எதுவுமே இல்லாத எமது பூமியை ஆதாம் ஆக்கிரமித்துக் கொண்டார் என்பதைவிடச் சுதந்தரித்துக் கொண்டார் எனக் கூறுவது மிகப் பொருத்தமாக அமையும். பல்நெடுங் காலத்திற்கு முன்னரே சுதந்தரித்துக் கொள்ளப்பட்ட இப் பூமியில் இன்று அவரது வாரிசுக்களாகிய நாம் பூமியில் இருந்த முதல் ஜீவன்களாக வாழ்கின்றோம். எனவே இப் பூமியின் சொந்தக்காரர்கள் நாம் என உரிமை கொண்டாடுவதில் எதுவித தவறும் இல்லை எனக் கூறலாம். ஆக சமயங்களின் கருத்துப்படி சிலவேறுபாடுகள் காணப்படினும் இந்தப் பூமியின் சொந்தக்காரர்கள் மனிதர்களாகிய நாமே ஆகின்றோம்.

இனி விஞ்ஞான ஆய்வுகளின் அடிப்படையில் பார்த்தால் நீண்ட நெடுங்காலமாக நடைபெற்ற வேதியல் மாற்றங்களினாலேயே உயிரினங்கள் தோன்றி சூழலுக்கேற்ப பரிணாமா மாற்றங்களுக்கு உட்பட்டு மனிதன் உட்பட எல்லா உயிரினங்களுமே தோன்றின என்கின்றது. பொதுவாகவே எந்தவொரு விஞ்ஞான ஆய்வாளனிடமுமே இதற்கு மாறான கருத்து இல்லை எனலாம். இந்த வேதியல் மாற்றங்கள் பரிணாமா மாற்றங்கள் எல்லாமுமே பூமியிலேயே ஏற்பட்டு இந்தப் பூமியில் மனித இனம் தோன்றியது எனக் கூறுவோமேயாயின் மனிதர்கள் பூமியின் சொந்தக்காரர்கள் என்பதில் எந்தவிதமான மறுப்பும் இல்லை. இம் மாற்றங்கள் எல்லாம் பூமியிலேயேதான் ஏற்பட்டனவா எனக் கேள்வி [illegible]றினைக் கேட்டால் எல்லோராலும் ஏகமாக "ஆம்" என்று கூறமுடியவில்லை. சிலர் எல்லாச் சங்கிலித் தொடர் மாற்றங்களுமே பூமியிலேயே தான் நடைபெற்றன எனக் கூற வேறு சிலரே ஒருபகுதி வேறு எங்கேயோ நடைபெற மிகுதி பூமியில் நமது பூமியில் நடைபெற்று முடிந்தது எனக் கூறுகின்றார்கள். இன்னும் சிலரோ மனித இனமே எமது பூமியில் தோன்றியிருக்க முடியாது! வேறு எங்கேயோ மனிதன் எப்படியோ தோன்றி ஏதோ ஒரு காரணத்திற்காக பூமிக்கு வந்து பூமியை ஆக்கிரமித்துக் கொண்டான்! என்கிறார். ஒவ்வொரு பகுதியினரும் தமது கருத்துக்களுக்கு ஆதாரமாக இன்று பூமியில் காணப்படும் சில தடயங்களைச், சம்பவங்களைக் கூறுகின்றார்கள். எடுத்துக் காட்டுகின்றார்கள்.


எனவே வெவ்வேறு மதங்கள் வெவ்வேறு விதமான விளக்கத்தை கொடுத்தது போலவே வெவ்வேறு ஆய்வாளர்கள் குழுக்கள் வெவ்வேறு கருத்துக்களைக் கொடுத்து பூமியின் சொந்தக்காரர்கள் யார் என்ற வினாவிற்குப் ஒரு புதிரான விடையை எமக்குத் தந்துள்ளார்கள். சிலரது விளக்கத்தின் படி மனித இனம் பூமியின் அசல் சொந்தக்காரர் எனவும், வேறு சிலரின் விளக்கத்தின்படி மனித இனம் பூமியை ஆக்கிரமித்துக் கொண்ட பூமியின் சொந்தக்காரர்கள் எனவும் ஆகிறது.


NEW Technology Security and Sound Inc.
Tel: (416) 335-4070

Fax: (416) 335-9936
தமிழர் நெஞ்சங்களில் நிறைந்து நிற்கும் எங்கள் ஸ்தாபனத்தின்
மாபெரும் மலிவு விற்பனை
Car Alarm & Installed
$99.99

$199.99 Car Alarm and Starter & Installed
PIONEER CD-PLYER ON SALE !!! $199.99
STEREO, SPEAKER, TWETTER, AMPS, SUBWOOFER, FOG LAMPS, SIDE MARKER, PAGER & MUCH MORE
AVITAL · Ultra Start · CLIFFORD The Science of Security · VIPER · Pioneer · Audiobahn
❁ We also do any Electrical work.
New Technology Security & Sound Inc.
Steeles Ave · Passmore Ave. · McNicoll Ave. · Finch Ave · 3501 #9
Tel: (416) 335-4070
3501 McNicoll Ave., Unit #9, Scarborough, Ont M1V 2N3




பூட்டு? சாவி?
KEERTH LOGSMITH
வீடு-வியாபாரம்-தொழிலகம்
வீட்டு திறப்புகள் தொலைந்து விட்டதா?
மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது
சகலவித திறப்பு சம்பந்தமான
பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில்
வைத்திருக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்
(416) 439-3709
Pager: 375-7330




யோகா சோதிடம்.
☆ கிரகப் பொருத்தம் பார்த்தல்
☆ சுபமுகூர்த்தம் கணித்தல்
☆ சாதகக்குறிப்பு கணித்தல்
☆ பலன் பார்த்தல்
☎: (416) 299-8361

## பிள்ளைகளின் மொழி வளர்ச்சியைத் தூண்டுவதற்கான சில ஆலோசனைகள்



பிள்ளைகள் தமது சொந்த மொழியில் (தாய்மொழியில்) திறமை பெற்றிருப்பது மிகவும் அவசியம். சொந்த மொழியில் திறமையாக இருந்தால் ஆங்கிலம் கற்பது இலகுவாக இருக்கும். வீட்டில் சொந்த மொழியை வளர்ப்பதற்கான சில ஆலோசனைகள்.

1. உங்கள் பிள்ளைக்கு கதைகளை வாசியுங்கள் அல்லது கூறுங்கள். கதையைப் பற்றிக் கேள்வி கேளுங்கள். அடுத்து என்ன நடக்கும் என நினைக்கிறாய்? அவன் ஏன் அவ்வாறு செய்தான்? நீங்கள் கூறிய கதையைத் திருப்பிக் கூறும்படி கேளுங்கள்.

2. நீங்கள் செய்வதை அல்லது பார்ப்பதைப் பற்றிக் கதையுங்கள். உதாரணமாக தொலைக்காட்சியில் பார்ப்பதை அல்லது நடக்கும் போது, பொருட்கள் வாங்கும் போது பார்ப்பதைப் பற்றிக் கதையுங்கள். இதனால் உங்கள் பிள்ளை புதிய சொற்களை அறிந்து கொள்ள இது வழி வகுக்கும்.

3. உங்கள் பிள்ளை ஒரு சொல்லை அல்லது வாக்கியத்தைப் பிழையாகச் சொன்னால் அது எவ்வாறு சரியாகச் சொல்லப்பட வேண்டும் என்பதை நீங்கள் சொல்லிக் காட்டுங்கள்.



உதாரணம்:

பிள்ளை - நான் ஒரு பூரையைக் கண்டேன்
வளர்ந்தோர் - பூரை அல்ல பூனையைக் கண்டேன்.
பிள்ளை - நான் பள்ளிக் கூடம் போவன்
வளர்ந்தோர் - நான் பள்ளிக்கூடத்திற்குப் போகிறேன்

4. நீங்கள் பிள்ளையோடு பேசும் போது தெளிவாக ஆறுதலாகப் பேசுங்கள். விளங்காத போது கேள்விகளை கேட்கும் படி உங்கள் பிள்ளைகளிடம் சொல்லுங்கள். (நீங்கள் சொன்னது உங்கள் பிள்ளைக்கு விளங்காவிட்டால்)

1. நீங்கள் கூறியதை இலகுவான சொற்களில் சிறு, சிறு வசனங்களாக்கித் திருப்பிச் சொல்லவும்.



உதாரணம்: படுக்கைக்குப் போகுமுன்பு பல்லைத் துலக்கி, பஜாமாவைப் போட்டுக் கொண்டுபடுக்கவும். பஜாமாவைப் போடுங்கள். பல்லைத் துலக்குங்கள். பின்னர் படுக்கைக்குப் போங்கள்.

2. நீங்கள் சொன்னதைத் திருப்பிச் சொல்லச் சொல்லுங்கள். இவ்வாறு செய்வதால் உங்கள் பிள்ளைக்கு எது விளங்கவில்லை என்பது தெரியும்.

3. நீங்கள் பேசும் போது முகபாவனைகளைக் காட்டுங்கள் அல்லது பொருட்களைக் காட்டுங்கள்.



4. உங்கள் பிள்ளையோடு, ஒவ்வொரு நாளும் சில நிமிடங்கள் கழிப்பதற்கு முயற்சி செய்யுங்கள். இவ் வேளையில் அவரோடு ஒரு விளையாட்டை விளையாடலாம் அல்லது ஒரு புத்தகத்தை வாசிக்கலாம். இந் நேரத்தில் கதைப்பது மிகவும் சுலபம் என்பதையும் வேடிக்கையானது என்பதையும் காண்பிப்பதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு.



**QUALITY AUTO TECH**
**குவாலிற்றி ஓட்டோ ரெக்**

WE SPECIALIZE IN LEXUS &
TOYOTA DIAGNOSIS & REPAIRS.
CALL FOR AN APPOINMENT



தொடர்புகளிற்கு: 416 618 9048





**J DAYCARE**

- 7 மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்கு சிறந்த பராமரிப்பு
- ECE தகுதி பெற்ற நடத்துனர்
- TAX RECEIPT வழங்கப்படும்
- காலை 7:00 மணி - மாலை 6:00மணிவரை
- மாலை 6:00 மணி - மாலை 10:00 மணிவரை

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $60.00

தினசரி நடவடிக்கைகள்-: உள்ளக, வெளியக விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா

தொடர்புகளுக்கு: Mrs. S.J. சௌந்தரநாயகம் (416) 502-3033
*(Finch/Birchmount) 151 Lamareaux Dr., TownHouse 99A, Scarboro, Ont. M1W 2J9*




**VIMAC HOME RENOVATIONS**

